ரோஜா

தை 1995 இதழ்: 5 மலர்: 3

# "தைப் பொங்கல் சிறப்பிதழ்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TYPESETTING

GRAPHIC DESIGNS | LAYOUTS | TYPESETTINGS

பத்திரிகைகள்
சஞ்சிகைகள்
விழா மலர்கள்
நினைவு மலர்கள்
விளம்பரப் பிரசுரங்கள்
திருமண அழைப்பிதழ்கள்

உங்களுக்குத் தேவையான சகல அச்சமைப்புத் தேவைகளையும் அழகான முறையில் நிறைவேற்றிக் கொள்ள...

TVLa Publications

ரிவிலா பப்ளிக்கேஷன்ஸ்

F.P.P.O., P.O.BOX 45593, 747 DON MILLS ROAD, DON MILLS, ONT. M3C 3S4

தொடர்புகளுக்கு:- Tel: (416) 425-2884
Fax: (416) 425-2625

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத மலர்

# ரோஜா

மலர்.3 இதழ்.5

**ஜனவரி 14, 95 - பெப். 12, 95**


ஆசிரியர்.
**வி.எல். ஆனந்த்.**

வடிவமைப்பு/அச்சமைப்பு/பிரசுரம்/விளம்பரம்
**ரிவிலா பப்ளிக்கேஷன்ஸ்**

அட்டை வடிவமைப்பு.
**கரன் கிராப்**

அச்சுவேலை.
**குவாலிற்றி அச்சகம்**

விநியோகம்.
**ஜேசு**

ஓவியம்.
**ரூபி**
**சுகந்தி**
**கணகலிங்கம்**




**Articles/Advertisements**

**TEL: (416) 425 2884**
**FAX: (416) 425 2625**

**Address:-**

**"ROJAH"**
**F.P.P.O., P.O.BOX 45593,**
**747 DON MILLS RD,**
**DON MILLS,**
**ONT. M3C 3S4, CANADA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த ரோஜா..... - பேசும்
ஆசிரியரின் பேனா!.......

# தடுக்க முடியுமா?.....

தஞ்சாவூரில் நடைபெறும் எட்டாவது தமிழாராச்சி மகாநாட்டில் ஈழத்தமிழறிஞர்களுக்குத் தமிழகம் கதவடைப்புச் செய்யப்பட்டமை பெரும் வேதனையை ஏற்படுத்துவதாகவுள்ளது.

ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பில்லை என்ற காரணம் காட்டிய தமிழக அரசு, தமிழ்நாட்டில் தங்கி வாழும் ஈழத்து அகதிகளை கேவலமாக நடத்தியும், ஈழ விடுதலைப் போரை நசுக்கிவந்தது மட்டுமல்லாமல் இப்போது ஈழத் தமிழர்களையும் அறிஞர்களையும் அவமானப்படுத்தியுள்ளது. இச்செயலால் எக்காலத்திலும் அழியாத பெரும் அவப்பேயரை தமிழகம் தேடிக்கொண்டது.

தமிழக சினிமா கலைஞர்களை வளர்த்து வந்தவர்களில் ஈழத்தமிழர்கள் பெரும் பங்கு வகிப்பது தமிழகம் அறிந்ததே. ஈழத்தமிழர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் புலிகளே என்று கூறிக்கொள்ளும் தமிழகத் தலைவி ஜெயலலிதாவிற்கு, ஈழத் தமிழர்கள் (புலிகள்) வாழும் உலக நாடுகளுக்குச் சென்று பைகளை நிறப்பும் தமிழக கலைஞர்களை தடுக்க முடியுமா?........

~ வி.எல். ஆனந்த் ~






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் படத்தை நன்றாகக் கவனியுங்கள்.
இப் படத்திற்குள் கவிதையொன்று புதைந்துகிடக்கிறது.

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்து போனவை....

வாழ்க்கைக் கலண்டரில்
இன்னொருநாள் இல்லாமல் போனது
மனிதர்களைப் போலவே
கடைகளிலும்
கிழடுதட்டிப்போன கலண்டர்கள்
மூலையில் முடங்கிவிட
புதுப்புது வர்ணங்களில்
புதிய கலண்டர்கள்.

★★★

என் சம்மதத்தைக் கேட்காமலே
கடிகாரம்
இரவு பகலாக ஓடி
ஒரு வருடத்தைத் தொலைத்துவிட்டது!
தொலைந்தவருடம் என்னுடையது!
உறக்கமுமற்ற, விழிப்புமற்ற
ஒரு புதிய பரிமாணத்தில்
என் வருடம் புதைந்து போனது.

★★★

நிலா. குகதாசன்

வருடத்தை இழந்ததில்
எனக்குத்தான் இழப்பு அதிகம்....
நாளை, நாளையென்று நான்
தள்ளிவைத்த பொழுதுகளை
எந்தக் கொம்பனாலும்
எடுத்துத்தரமுடியாதாம்!
ஈடுசெய்யமுடியாத இழப்பு....
என் பக்கத்துக்குத்தான்!

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் தேக்கிவைத்த
கனவுகளைச் சுமந்து, சுமந்து
கண்கள் களைத்துப்போயின....
நடந்து முடிந்த தூரமும்
நடக்கவேண்டிய தூரமும்,
தெரிந்துகொள்ளமுடியாமல்
கால்கள் துவண்டுபோயின....

★★★

குதிகால் பிடரியில் அடிபட
மீண்டும், மீண்டும் நடப்பேன்!
காற்றில் பறக்கும்
கலண்டர் தாள்களாய்
புழுதியில் என் பொழுதுகள்!
வருட முடிவில் மீண்டும்
கலண்டர் புதுப்பிக்கப்படும்!

★★★

குறிப்பு:
இந்தக்கவிதையை என்நண்பரும், நவீன
ஓவியருமான கருணாவிடம் கொடுத்து
இதற்கு ஒரு படம்வரையச்சொன்னேன்.
படம் மூன்றாம் பக்கம் பார்க்க.

நிலா. குகதாசன்
01.01.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ. திருமணம் அன்புடைமை

*மணப்பந்தர்.*

வாசலில் பழுத்த குலைகளுடன் குனிந்து வரவேற்கும் வாழை மரங்கள், அளவான குத்து விளக்குகள், பன்னீர்ச் செம்புகள், சந்தன, குங்குமச் சிமிழ்கள் புடைசூழ முறையாகக் கொலுவிருக்கும் நிறைகுடம்.

வாசலுக்கும், பந்தருக்கும் இடையில் மாவிலைகளுடன் மாறுபடும் தென்னங் குருத்துத் தோரணங்கள்.

உள்ளே மல்லிகை முல்லை மலர்ந்த ரோசா மலர்களாலான மாலை வேலைப் பாடுகள்.

நாதசுரத் தேன்மழை காதுகளைக் குளிப் பாட்டுகின்றன. முதன்னையான இடம் முத்துமணவறை.

முத்திரைத் தூண்கள், யாளிகள், காவல் தெய்வங்கள், இலட்சுமி சிலைகள், மயில்கள், அன்னங்கள், வண்ணப் பதாகைகள் என்பவற்றோடு கூடிய சித்திரக் கோபுர அறை.

சித்திர மணவறையில் மாப்பிள்ளையும் பொண்ணும்.

தலைப்பாகையோடு கூடிய கலாச்சார உடையில் மாப்பிள்ளை மாமன்னனைப் போல வீற்றருக்க, பக்கத்தில் வெட்கத்தைப் பொங்கிப் படைத்தபடி வளவர் கோன்பவை அழகி.

இருவருக்கும் இது பொன்னாள். நாட்கள் பலவாக ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நன்னாள்.

ஓர் இன்றியமையாத உறவு இவர்களை இணைத்திருக்கின்றது.

இந்த உறவு நிறைவாகத் தொடர்வதற்கு அடிப்படையாக அமைவது அன்பு. இவர்கள் இனி நடத்தவிருக்கும் இல்லறத்துக்கும் அதுவே துணை. அன்பை வளர்த்தால் அறம் வளரும். அறம் வளர்ந்தால் இன்பம் பெருகும். இன்பம் பெருகின் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்லஃ துறும் கழுமலர் வளநகர்**
**பெண்ணில் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே.**


*திருஞாசம்பந்தர் தேவாரம்*

- கவிஞர் வி. கந்தவனம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் நல்வாழ்த்துக்கள்



எழுத்தாளர்கள், வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ரோஜா

கலை, இலக்கிய மாத மலர்

அன்புகொண்ட வாசக நெஞ்சங்களே!

'ரோஜா' மாத மலராக வெளிவருகின்றது என அறிவிக்கப்பட்ட போதிலும் சில மாதகாலமாக 'ரோஜா' வெளிவரவில்லை. "ஏன்" என்ற கேள்வியை அனேக வாசகர்களும், எழுத்தாளர்களும் தொலைபேசி மூலமும், நேரடியாகவும் கேட்டார்கள். காரணங்களை ஏற்காத நிலையில் ஒழுங்காக வாசகர்களை ஏமாற்றாது சஞ்சிகையை வெளியிடுங்கள் என்று உரிமையோடு கூறினார்கள்.

உரிமையுடன் விசாரித்து ஊக்கம் கொடுத்த வாசகர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் தைப்பொங்கல் சிறப்பிதழை தொடர்ந்து வெளிவருகின்ற 'ரோஜா' இதழ்கள் மாதந் தோறும் 10ம் திகதிகளில் வெளியிடப்படுமென உறுதி கூறுகின்றேன். மீண்டும் அனைவருக்கும் எனது நன்றிகள்.

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பேட்டுக் கோழி

"தாத்தா..... தாத்தா..... வெள்ளைப் புறா கதை சொன்னீங்கள் நல்லாயிருந்தது வேறை கதை சொல்லுங்கோ" ராசுக்குட்டியரைப் பார்த்துக் கேட்டது பேரக்குழந்தை தனது ரெண்டுங்கெட்டான் பாசையில்.

"சொல்லுறன்... பிள்ளை சொல்லுறன்." 'பாவாடை வாங்கிக் கொண்டு வாங்கோ தாத்தா' எண்டு சொல்ல வந்து, 'பாடை வாங்கிக் கொண்டு வாங்கோ' எண்டு சொன்ன தன் பேரக் குழந்தையை, எத்தனை தடவை சொல்லியும் திருத்த முடியாத நிலையில் கதை சொல்லத் தொடங்கினார் ராசுக்குட்டியர். இது ஒரு இலங்கைக் கோழியின்ரை கதை, பக்கத்து வீட்டுப் பிள்ளையளையும் கூப்பிடு சொல்லுறன் என்ற ராசுக்குட்டியர் போயிலை நெட்டியை வாய்க்குள் திணித்தபடி உள்ளே சென்றார்.

பிள்ளைகள் கதை கேட்கத் தயாராயினர். ராசுக்குட்டியர் தொடங்கினார்... "எங்கடை ஊர் எது?" என ஒரு கேள்வியைக் கேட்டார். எல்லாம் கூட்டு மொத்தமாக "கனடா' என்றன. "இல்லை... இல்லை... எங்கடை ஊர் யாழ்ப்பாணம். அது இலங்லையில இருக்கு" என்ற ராசுக்குட்டியர் "எங்களுக்கென்டு ஒரு ஊர் இருக்கு இது தற்காலிகமான ஊர்" என்றார். "No... No... தாத்தா மை டட் சொல்லிச்சு... இது தானாம் எங்கடை ஊர் Forget சிறீலங்கா எண்டு" சொன்னார்.

"உந்த டட் மாரும் அம்மி மாரும் தானே எங்கடை சமுதாயத்துக்கு எதிரா நிற்கினம். உந்த டட் மார் அம்மி மார் எங்கை இருந்தவை எண்டு நினைச்சுப் பார்க்கினமோ. அதுகளை விடுங்கோ நாங்களாவது தமிழன் எண்டு சொல்ல வாழுங்கோ...." எண்ட ராசுக்குட்டியர் தொடங்கினார்.

"எங்கடை ஊரில அந்தக் கோழி நல்லா வாழ்ந்து வந்தது. நாட்கள் செல்லச் செல்ல அந்தக் கோழி வளர்ந்து பெரிசாகியது. அப்ப நல்ல வெள்ளைச் சாவல் ஒண்டு அதைக் கண்டு கலியாணம் முடிக்க ஆசைப்பட்டது. சதி... மற்றைய எல்காக் கோழிகளும் சேர்ந்து அவைக்கு கலியாணம் செய்து வைத்தன.

நாட்கள் செல்ல கோழி முட்டைகளை போட்டு அடைகாக்கத் தொடங்கியது. எட்டிக் குஞ்சுகள் அவைக்கு சேவலும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழியும் தங்கள் குஞ்சுகளை கண்ணும் கருத்துமாக வளர்த்தன. இந்த நாடு மதிரி அவையள் குஞ்சுகளை அடுத்தவளைப் பார் காசு தாறன் அண்டு வளர்க்கவில்லை. தங்கடை இரத்தத்தைப் பாசமாக்கி அவையளை வளர்த்தன. தாய்க்கோழி எப்பவும் வீட்டில இருந்து தன் செட்டை இரண்டுக்கும் நடுவில குஞ்சுகளை வைத்துக் காப்பாற்றி வந்தது. இந்த ஊரில மாதிரி விடியமுன்னம் தாய்ப் புறா ஒரு பக்கம், அரைவாசி நித்திரையில தன் குஞ்சுகளை இறக்கையில பிடிச்சு தர தர எண்டு இழுத்துக் கொண்டுபோய் பக்கத்து பெண்புறாவின்ரை வீட்டில விட்டிட்டுப் போற பழக்கம் அங்கை இல்லை. பாவங்கள் வெம்பி வெம்பி இதுதான் வாழ்க்கை எண்டு குஞ்சுகளா இருக்கிம் போதே வாழ்க்கையை அன்னிய வீட்டில தொடங்கிற வாழ்வு--- தகப்பன் சேவல் ஓடி ஓடி உழைச்சு குஞ்சுகளுக்கு சாப்பாடு கொடுத்து இன்பமா வாழ்ந்து வந்தன.

காலம் செல்லவானத்திலே பருந்துகள் பறக்க தொடங்கின. பெட்டைக் கோழி தன் குஞ்சுகளை செட்டைக்குள் இறுக அணைத்து அணைத்து வைத்துக் கொண்டது. ஆனாலும் பருந்துகளின் அட்டகாசம் கூடத் தொடங்கியது.

ஒருநாள் கடைசிக் குஞ்சு தாயைக் கேட்டது அம்மா... அம்மா... பருந்துகள் பறக்கிது பயமா இருக்கம்மா என்று, அதற்குப் பேட்டுக் கோழி ஐயோ ராசா பயப்படாதை நான் என்ன இருந்தாலும் உன்னைக் காப்பாற்றுவன் என சமாதானப் படுத்தியது. எனினும் ஒரு நாள் ஒரு குஞ்சு அது சாவல் குஞ்சு அதுக்குக் கொஞ்சம் துடிப்பு இருக்கும் தானே, அது சொல்லிச்சு நான் வேறு எங்கையாலும் போய் இரைதேடி உங்களுக்குத் தாறன் இந்தப் பருந்துக் கூட்டங்களை நினைக்கப் பயமாயிருக்கு எண்டு சொல்லி தாய் கோழியையும் தகப்பன் கோழியையும் சமாதானப் படுத்திவிட்டு வெளியேறி விட்டது.

இலங்கைக் கோழியளுக்குப் பிறந்த குஞ்சு அல்லவா? அதுக்கு பாசம், அன்பு, கடமை எல்லாம் கூடப் பிறந்தது. வந்த குச்சு தன் நேரத்தை உழைப்பில் ஈடுபடுத்தி அயராது உழைத்து இரைதேடி ஊருக்கு அனுப்பி தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தது. தகப்பன் சேவலும், தாய்க் கோழியும் மிக மிக சந்தோஷமடைந்தன. மற்றைய குஞ்சுகளுக்கும் நல்ல வாழ்வு, உணவு கிடைத்தது. ஒருநாள்......

***அடுத்த இதழில் தொடரும்***

## நான் சொல்லமாட்டன்
## அதைமட்டும்
## நான் சொல்லமாட்டன்

ஸ்காபுரோவில் உள்ள ஆலயமொன்றின் ஐயாவும், அவர் பாரியாரும் ஜெறாட் இந்தியன் பசாரிலுள்ள, தமிழருக்குச் சொந்தமான புடவை மாளிகைக்கு விஜயம் செய்திருந்தபோது......

**கடை உரிமையாளர்:** *“இந்த சால்வை கொஞ்சம் விலைகூட ஐயா..., உங்களுக்காகத் தான் எடுப்பிச்சனான்...”*
**ஐயா:** *“கோயிலுக்கு பட்டு கேட்டு வருபவர்க்கு இதை கொடுத்து விடுங்கோவன்...” “அதுகள் சாரியை இரண்டாக கிழித்துக் கொண்டுவந்து தருதுகள்...”*
**கடை உரிமையாளர்:** *“அவர்கள் தங்களின் வசதிக் ஏற்றமாதிரித் தானே வாங்கிக் கொண்டு தருவார்கள் ஐயா...”*
**ஐயா:** *“அப்படிச் சொல்லாதைங்கோ..., கனடாவில இருக்கிவர்கள் கஸ்டப்படுகிறார்கள் என்பதை என்னல ஏற்றுக்கொள்ள முடியாது. ஊரில என்றால் வேறு.......”*
(நீண்ட சம்பாஷனையின் பின் ஐயாவும் அவர் பாரியாரும் கடையிலிருந்து வெளியேறினர்.)
**கடைக்கு வந்திருந்த வாடிக்கையாளர்:** *“இவருக்கு கொடுத்த அடி காணாது”* என்றார். இதை இங்கு நான் சொல்ல மாட்டேன்.



- மணி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உலகத்தமிழாராய்ச்சி மகாநாடும் உணர்வற்ற தமிழரும்..."

~ சிவா சின்னத்தம்பி ~

தஞ்சைப் பெருநகரில் நடந்தேறிய தமிழாராய்ச்சி மகாநாடானது தமிழின் தொன்மையை, அதன் மகிமையை, தனிச்சிறப்புக்களை தமிழறிஞர்களால் துருவித்துருவி ஆராயப்பட வேண்டும் என்பதற்காக தமிழீழ தவத்திரு தனிநாயகம் அடிகளால் ஆரம்பித்து வைக்கப் பட்டதை அனைத்து உலகே அறியும்.

அப்படியிருந்தும் அரசியல் சுயலாபங்களுக்காக அடியோடு அதன் நோக்கங்களிலிருந்து விடுபட்டு எங்கோ திசைமாறிச் சென்றுவிட்டது. அசல் இலக்கியங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்றெல்லாம் அரங்கேற்றப்பட வேண்டிய இம் மாகாநாட்டிற்கு அறிஞர்களுக்கு ஆதரவாக அரசு செயற்பட்டிருக்க வேண்டுமே ஒழிய அனைத்து அலுவல்களையும் அரசு கையில் எடுத்து அதிகபிரசங்கித் தனமாக நடந்து அறிஞர்களையும், அறிவுசால் மனிதர்களையும், ஆர்வமுள்ள எதிர் கால இலக்கிய வித்தகர்களையும் அவமதித்திருக்கிறது. அரசியல் பிரச்சாரத்திற்காக ஆராய்ச்சி மகாநாடு கொச்சைப்படுத்தப்பட்டு விட்டது. இலக்கிய கர்த்தாக்களினாலும், அறிஞர்களாலும் அரசியல் திணிப்பின்ற தனித்துவமாக அரச துறையினரின் ஆதரவோடு நடந்தேறவேண்டிய மகாநாடு அரசியல் வாதிகளினாலும் அரச சார்புள்ளவர்களினாலும் அறிஞர்களையும் இலக்கிய வாதிகளையும் அடிபணிய வைத்து ஒர் அரசியல் ஆராய்ச்சி மகாநாடாக ஏற்படுத்திக் கொண்டது எம் இனிய தமிழுக்கு இளைத்த துரோகம்.

அதுவும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு என்று உலகளாவிய ரீதியில் உலகத்து வாழும் அனைத்து தமிழரினதும் ஆர்வத்தினை பூரணப்படுத்தப் படவேண்டிய மகாநாடானது ஒருதலைப்பட்சமாக ஓரிரு சாராரால் தம் சொந்த நலன்களுக்காக ஓர் இனத்தை அதன் பாரம்பரிய மேம்பாடுகளை ஒட்டுமொத்தமாக கையாண்டு தமிழினத்தை உணர்வுகளை குழிதோண்டிப் புதைத்து தாம் லாபம் தேடிக் கொண்டது எந்த வகையிலும் மன்னிக்கப்பட முடியாதது.

தமிழ் நாடென முலாம் பூசப்பட்டு தமிழர்களை தமிழரல்லாத தமிழர்கள தம் ஆட்சிக்குக் கீழ் ஆண்டுகொண்டிருப்பதுவும் தமிழரின் அடிமைத்தனத்தைப் பிரதிபலிக்கிறதென்றால் மிகையாகாது. இராமன் ஆண்டால் என்ன இராவணண் ஆண்டால் என்ன என்று அலட்சியமாக வாழ்பவரின் மிலேட்சைத் தனத்தால் தமிழினம் இன்றும் அன்னிய இனத்தவரின் அடக்கு முறைகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஆளாகி அநாதைகள் போல் வாழ்வதையே காட்டி நிற்கிறது.

அந்த நாளில் அந்நியனுக்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அஞ்சாது வாழ்ந்த இனம் இன்று ஏனோதான் ஈழத் தமிழருக்கு அஞ்சும் நிலை ஏற்பட்டது என்றுதான் கேட்ட வேண்டியிருக்கிறது. அதாவது ஈழத் தமிழறிஞர்களை மட்டுமல்லாது எந்தவொரு தமிழனும் அதுவும் தமிழ் நாட்டில் தஞ்சாவூரில் நடைபெற்ற மகாநாட்டில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுளா பாஷன்

MF

- மங்கையர் தம் நெஞ்சையள்ளும் வகை வகையான புடவைகள், பஞ்சாபி உடைகள், நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான சட்டைகள், பருத்தி, பட்டு வேட்டிகள்
- சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய டிசைன் களில் 22கரட் தங்கநகைகள், ஆபரணங்கள்
- இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எவர்சில்வர் பாத்திரங்கள்



மலிவு விலையில் சாதனை படைத்த 'மஞ்சுளா பாஷன்' ஸ்தாபனத்தினர் ரொறன்ரோ நகரம் இது வரை கண்டிராத மாபெரும் மலிவு விற்பனை ஒன்றை தர இருக்கிறார்கள். இதன் காரணம், விலை விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

எங்கள் வளர்ச்சிக்கு உதவிய தமிழ் மக்கள் அனைவருக்கும் எமது **பொங்கல் வாழ்த்துக்கள்**

நாகரிகத்தின் பிறப்பிடம் **Manchulaa Fashion**

**5818 SHEPPARD AVE. EAST, SUITE# 203, SCARBOROUGH**

**Tel: (416) 297-9875, 297-7011 Fax: (416) 297-7595**

ரோஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணித்தியாலத்துக்குள் வருமான வரிப்பணத்தை மீளப்பெறலாம்!



உங்கள் வருமான வரி
மீளல் விண்ணப்பப் பத்திரத்தை
மின் கணணியூடாக
(Electronically) செலுத்தி
காசோலையாக
உடன் பெறலாம்



## PAN-TAX INC

**868 Markham Road, Unit. 103, Scarborough**

**Tel: (416) 438-5000**

★ தரமான இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்

★ உடன் மரக்கறி, பழவகைகள்

★ உடன் இறைச்சி, மீன், நண்டு, இறால் கடலுணவுப் பொருட்கள்

மற்றும் உங்கள் சகல தேவைகளையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

*Tel: (416) 288-9246*
*Fax: (416) 288-9243*

தரமான
கேற்றறிங்
சேவைக்கும்

**Victoria Park / St. Clair** சந்திப்பில்

## MINOCH'S MINI MART

**1151A Victoria Park Ave, Unit. 1, Scarborough, Ont.**


ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வேறோர் இனத்தினால் கட்டியெழுப்பப்பட்ட நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குள் தமிழர்களை கலந்து கொள்ள விடாது தடைசெய்யப்பட்டிருந்தால் சற்று வித்தியாசம். ஆனால் கோடி தமிழருக்கும் ஏகயோக நாடான தமிழ் நாட்டில் தமிழறிஞர்கள் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்காதது இந்தியாவின் அநாகரிகச் செயற்பாட்டைக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறிருக்க இந்தியத் தமிழரது நிலைப்பாடென்ன. தமிழரல்லாத அம்மையாரினது ஆட்சியில் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கலாம். எதையும் கண்டும் காணாதவர் போல் நடந்து கொள்ள இந்தியத் தமிழரும் இணங்கி வாழ்கிறார்கள் என்பதுதான் புரியாமலுள்ளது.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தை அழித்திடுவோம் என்று கூறியதை போற்றிய தமிழரா? இவர்கள். தமிழன் ஒருவனுக்கு உரிமை மறுக்கப்படுகிறதை தட்டிக் கேட்க நாதியில்லாத தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழர்களா? தமிழ் நாட்டுத் தமிழரை திரை, மூடி மறைத்து விட்டதா? தானாடாவிட்டாலும் தசை ஆடும் என்பார்களே. தமிழ் நாட்டுத் தமிழரது தசை என்ன சூடு சுரணை யற்று மரத்துப்போய் விட்டதா? தண்டவாளத்தில் தலை வைத்த தமிழரைத் தந்த தமிழ் நாடா இப்படி ஆகிவிட்டது. தன்னலம் தமிழர்களின் கண்களை மறைத்து தாம் வாழ்ந்தால் போதுமென வாழப்பழகி விட்டதா?

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புனித வார்த்தைக்கு இழுக்கு ஏற்படுத்தி விட்டார்களே. ஈழம் ஒரு ஊரே இல்லை இவர்கள் தமிழர்களே இல்லையென இன ஒதுக்கீடு செய்து புறம்பு காட்டியமை எந்த வகையில் நியாயம். யாவும் தமிழரே யாவரும் கேளிர் என்று யாம் கூறியா நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். சில வேளை யாதும் ஊரே என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் தமிழர் என்பதை ஏற்கனவே அறிந்த அறிஞரால் தான் இந்த வாக்கியம் சேர்த்துக் கொள்ளப்பட்டதா? என்று சந்தேகம் வர வாய்ப்பிருக்கிறது.

அன்றாடம் தமிழரது அரசியல் நன்மைகளுக்காகவோ, அவரவர் பெயர்களை புகழ் பெறச் செய்யும் குறுகிய நோக்கத்தோடு இந்தத் தனியாராய்ச்சி மகாநாட்டின் தேவை இருக்கவில்லை. தமிழினத்தின் வலிமையை தேவையை நீண்டகால ஸ்திரமான நிலைப்பாட்டை வளர்த்து நம்மினம் நாடுபோற்ற தன்னிறைவு மிக்கதோர் தனித்தமிழினமாக வாழவேண்டுமென்ற புனித நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதை அனைத்துலகத் தமிழரும் அறிவர். ஆராய்ச்சியின் பிரதிபலனாக அழிந்தொழிந்து போன ஆவணங்கள் சேர்க்கப்பட்டு, புணரமைக்கப்பட்டு எமது இனத்தின் பெருமையை வெளிக்கொணர்வதும் ஓர் அம்சமாகும்.

எவை எவ்வாறு இருப்பினும் எட்டாவது தஞ்சாவூர் மகாநாடானது தமிழீழ மக்களை மட்டுமல்ல தமிழரான அனைவரையும் வேதனைக்குள்ளாக்கியிருக்கிறது என்றால் யாரும் மறுக்க மாட்டார்கள்.

தாம் மட்டும் தமிழர், தமிழறிஞர் என்று பெருமை கொண்ட நம் தமிழர், தாம் தஞ்சாவூர் மகாநாட்டில கலந்து கொள்ளப் போகிறோம் என்று சென்றவர்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத பெருமையோடு வந்து சேர்ந்து விட்டார்கள் என்பதிலே நாம் பெருமை கொள்ளாதிருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரும் தகைகள் ஈழவருக்கு தகுந்த இடமளிக்கப்படவில்லை என்பதை உணர்ந்தும் உணராதவராய் பெருந்தன்மையோடு பகிஷ்கரித்துக் கொள்ளாதவர்களாய் நடந்து தமக்குத் தாமே கரிபூசிக் கொண்டு வந்தவர்களை யாரும் மறந்து விட முடியாது.

சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களும், அதிகப்பெரும்படி வாக்குகளால் ஆசனங்களை கைப்பற்றிக் கொண்ட பரராசசிங்கம் அவர்கள் மகாநாட்டிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படியாக ஒருசிலரை வைத்தே உலகக் கண்துடைப்புகள் நடந்து வருவது எமது இனத்துக்குக் கிடைத்த சாபக்கேடு என்று சொல்ல வேண்டும்.

காலம் காலமாக கட்டிக் காத்து வளர்க்கப்பட்டு வரும் தமிழ், தமிழ் பிறந்த ஒவ்வருவருடைய பங்களிப்பினாலும் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறதெனலாம். எனினும் தென்னகத்துத் தமிழ் இலக்கியம், தமிழீழத் தமிழ் இலக்கியம் எனப் பிரிவு பாராது தமிழ் இலக்கியம் தமிழீழ மக்களினால் பேணப்பட்டு வந்தது நினைவு கூரத்தக்கது. தமிழ் நாட்டிலிருந்து வரும் தமிழ் சஞ்சிகைகள், நூல்கள், புராண, இதிகாச அனைத்து ஆக்கங்களையும் மனமார வரவேற்று அதனைப் படித்து அதிலூன்றிப் போனவர்கள் தமிழீழ மக்கள். ஆனால் எமது தமிழீழ ஆக்கங்களுக்கோ, அறிஞர்களுக்கோ எந்த வித ஆதரவோ, ஊக்கங்களோ தராதவர்கள் தென்னகத்து ஒருசிலர் என்றால் வாய்ப்பில்லை.

இன்றும் இந்தியத் தயாரிப்புக்களுக்கும், இலக்கிய ஆக்கங்களுக்கும் தோளுக்கு மேல் தோள் கொடுத்து நிற்பவர்கள் தமிழீழவர் மட்டுமல்ல புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் முதலிடம் வகிக்கின்றார்கள் என்றால் எவரும் மறுப்பதற்கில்லை. இந்தியச் சினிமாவில் மூழ்கிப் போன எம்மவரும் நாடு நாடாக வரும் கலைஞர்களையும் சினிமாக்களையும் மேடையேற்றி எவ்வளவோ ஆயிரக்கணக்கான டொலர்களை தினமும் எம்மவர்களிடமிருந்து சேர்த்துக் கொடுக்கிறார்கள் என்பதனையும் நின்சால் சொல்ல வேண்டும். இவைகளையெல்லாம் ஆழமாக சிந்தித்துக் கொள்ளுமளவில் இந்தியத் தமிழர் இன்றில்லை எனலாம். ஈழத் தமிழர் மீது என்ன களங்கம் சுமத்துவதற்கும் எவ்வளவோ தமிழரல்லாத தமிழர் கச்சை கட்டிக் கொண்டு மத்திய அரசுக்குக் கை கொடுத்து வருகிறார்கள் என்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இவைகளையெல்லாம் ஈழவர்களாகிய நாங்கள் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது எல்லாமே ஈழவர்களின் நன்மைக் கென்றே கருத்தில் கொண்டு எதிர்காலம் ஈழவர் எதிலும் அதிபுத்திசாலித் தனமாக நடந்து கொள்வது நம் இனத்திற்கு நன்மை பயக்கும் என்று கூறக்கிடக்கின்றது.

கவிதை
கட்டுரை
சிறுகதை
தொடர்கதை
விடுகதை
நகைச்சுவை
போன்ற ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

~நிலா. குகதாசன்~

## என் பேனாவின் பிரசவங்கள்

தமிழ் மொழியிலே காதல் என்கின்ற இந்த மூன்றெழுத்து வார்த்தைக்குள்ள சிறப்பே தனியானது! காதல் என்கின்ற வார்த்தையினுள்ளே கவர்ச்சி, கனிவு, கனம், கவிதை கண்ணீர் கனவு மட்டுமல்ல, சொல்லும் போதே ஒரு சுவையும் இருக்கிறது.

அதனால்தான் வரலாற்றின் ஏடுகளில் இன்னமும் இச் சொல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆதாம், ஏவாள் காலத்தில் ஆரம்பித்த இந்தக் காதல் கதை இன்னமும் வாழ்க்கைப் புத்தகத்தில் தொடர்கதையாகத் தொடர்கிறது. காதல் என்கிற சொல் பலருக்கு கசப்பாக இருந்தாலும் காதல் நிஜத்தில் இனிப்பானது!.. சொல்லும் நாவில் சுவைக்கக் கூடியது. காதலைக் காதலிக்கத் தெரியாதவர்கள் வாழ்க்கையையே காதலிக்கத் தெரியாதவர்களாகிறார்கள்.

மகிழ்வு, பூரிப்பு, திகில், சோகம், ஏமாற்றம், துன்பம்... இப்படித் தமிழிலுள்ள அத்தனை ரசங்களையும் ஒரே சொல்லில் சொல்ல நினைத்தால் அதுதான் காதல்!

காதல் ஒருவருக்கு கைகூடி வந்தால் மலையளவு பலம் மனசில் வந்திருக்கிறதென்று பொருள்.

பலத்தை மட்டுமல்ல பயத்தையும், சுகத்தை மட்டுமல்ல சோகத்தையும் ஒரேங நேரத்தில் உருவாகக்கக் கூடியது காதல். பெண்மையின் ஆழத்தை மட்டுமல்ல, காதலின் ஆழத்தையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவர் கிடையாது.

காதல் உருவக் கவர்ச்சியின் அப்படையில்தான் உருவாகிறது என்ற உண்மையைப் போலவே அதைத் தொடர உள்ளக் கவர்ச்சி தேவையென்பதும் உண்மையானது.

மல்ல. ஆனாலும் வாலிபப் பருவமே அதற்கு வசதியானது.

வாலிபப் பருவம் மனிதவாழ்வில் வசந்த காலம் மட்டுமல்ல, அதுதான் மழைக் காலமும்... சோகமும், சுகமும் அந்தப் பருவத்தில் தான் ஒன்றாக




உற்பத்தியாகிறது. அதனால் தான் காதல் என்கிற வானவில்லையும் அப்பருவத்தில் அடிக்கடி காண முடிகிறது.

பசித்தவனின் பசிக்கும், புசித்தவனின் பசிக்குமுள்ள வேறுபாடுதான் காமத்துக்கும் காதலுக்குமுள்ள வேறுபாடு. காதல் ஒரு கண்ணென்றால் காமம் மறுகண். இரண்டிற்குமான பார்வை ஒன்று. இந்த இரண்டில் எந்தக் கண் இல்லாமல் போனாலும் குருடுதான்.

எந்த ஒரு கண் இல்லாமல் போனாலும் காதல் அங்கே காணாமல் போய் விட வாய்ப்புண்டு.

காதல் உருவாகக் காலம் அவசிய

தாங்க முடியாத இன்பத்தையும், தற்கொலை செய்து கொள்ளுமளவிற்கான துன்பத்தையும் ஒரே நாளில் உருவாக்குவது காதல்! காதலுக்காக உயிரை இழப்பதை விட, உயிருக்காக காதலை இழப்பது உயர்வானது.

காதலின் உட்பொருளை உன்னால் வாசிக்க முடிந்தால் தான் இந்த மனிதத்தை, மண்ணை, காற்றை, ஏன் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL INSURANCE / FINANCIAL SERVICES
# &
# BST INSURANCE BROKERS
## சர்வதேச காப்புறுதி + நிதிச் சேவை



**A.Veluppillai**
**(Life Consultant & Insurance Broker)**
**காப்புறுதி ஆலோசகர்**

*அழையுங்கள்:-*

**Tel: (416) 412-0098**
**Fax: (416) 412-2135**
**Res: (416) 756-0794**

Life Section - Under International Insurance Property Section- Under BST Insurance

கனடாவில் 9வருட காப்புறுதி அனுபவமுள்ள ஆலோசகர் எப்பொழுதும் சிறந்த தேவைகள் உங்களுக்குண்டு. சகல காப்புறுதி விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

Auto, Fire, Tenants, Boat Industrial, Casuality, Liability, Personal, Investments, Education Plans, Life, Health RRSP, Commercial, Disability, Travel, Mortgage, RRIF, Mutual Fund, Cash Back, Whole Life, Term Insurance, Segregated Fund, Family Insurance, Short Payment Plan

வாகனம், நெருப்பு, வீடு, குத்தகைக்காரர், படகு, தொழிற்சாலை, விபத்து, கடன், தனிப்பட்ட, மூலதனம், கல்வித்திட்டம், வாழ்க்கை, சுகாதாரம், வர்த்தகம், வலது குறைந்தோர், பிரயாணம், அடமானம், பணம் மீழல், வாழ்க்கை முழுவதும் காப்புறுதி தவணை வாழ்க்கை காப்புறுதி, குறிப்பிட்ட கால காப்புறுதி, குடும்ப காப்புறுதி, குறுகிய கால பணம் செலுத்தல்

We represent oldest, largest, leading, well managed mutual and stock insurance companies.
We shop around, the BEST for our client's needs, Affordability, and choice.

**We arrange all types of Insurance**

எம்மால் சகல வித காப்புறுதிகளும், உலகில் சிறந்த காப்புறுதி ஸ்தாபனங்களில் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன், உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வண்ணம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்.

**ஆயுள் காப்புறுதி விசேட ஆலோசனைகள் உண்டு.**

Nine continuous years in Canadian Insurance Industry

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விராட் விஸ்வப் பிரம்மனே நம)

# THAARANI JEWELLERY
# தாரணி ஜுவலறி

உங்கள் அனைத்து ஆபரணங்களையும்
சிறந்த கை வேலைப்பாடுகளுடன் செய்துகொள்ள

THAARANI JEWELLERY

**Tel: (416) 289-6556**

3630 Lawrence Av. E., Unit #03, Scarborough
(Markham & Lawrence)

* அழகான அச்சமைப்பு
* தரமான அச்சுவேலை

Quality
PRINTING SERVICES

# குவாலிற்றி பிறின்ரிங்
# Quality Printing

**Tel: (416) 291-5384**

**2250 Midland Ave., Unit. 25, Scarborough, Ont.**

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகையே உன்னால் நேசிக்க முடியும்.

காதல் தெய்வீகமானது என்பதை விட, காதல் உணர்ச்சி பூர்வமானது என்பது நிஜமானது! நேசத்தில் கொஞ்சமும், பாசத்தில் கொஞ்சமும், வேதனையில் கொஞ்சமும், விட்டுக் கொடுப்பதில் கொஞ்சமும் சேர்ந்த கலவைதான் காதல்.

சரீரக் கவர்ச்சிதான் காதலின் அடிப்படை என்பது சத்தியமானது. புரிந்துணர்வும், சகிப்புத் தன்மையும் இருந்தாலே காதல் சாத்தியமானது.

காதல் அறிவிலியின் அறிவு. அறிவாளியின் முட்டாள்தனம் என்பது பழைய மொழி. காதல் நிஜமானது! நித்தியமானது!... சாசுவதமானது! என்பது புதியமொழி...

பிறப்பு எவ்வளவு உண்மையானதோ அதேபோல் முதற் காதலை மறக்க முடியாதென்பதும் உண்மையானது! மனிதனுக்கு மறுபிறப்பு உண்டென்பது நிஜமா? என்பதை விட மனிதக் காதலுக்கு மறுபிறப்பு உண்டென்பது நிஜமானது.

நிஜக் காதலுக்கும், நினைவில் உருவான கனவுக் காதலுக்கும் தொலை தூர வித்தியாசமுண்டு. ஆனால் நிஜக் காதலை விட கனவுக் காதல் இனிப்பானது என்பது கசப்பான உண்மை!

எத்தனை உறவுகள் இருந்தாலும் அத்தனை உறவுகளையும் அடித்து வீழ்த்தும் சக்தி காதலுக்குண்டு. அதனால் தான் எத்தனையோ சாம்ராஜ்யங்களின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் காதல் காரணமாக இருந்துள்ளது.

சத்தியமும், புரிந்துணர்வும் அத்திவாரமாக அமைந்த காதல் மாளிகையில் சந்தேகமும், அகம்பாவமும் உள்ளே நுழையும் போது காதல் அங்கே காணாமற் போய்விடும்.

காதல் பலருக்கு கானல் நீராயும், சிலருக்கு கண்ணீராயும் போனால் கூட இன்றும், என்றும் உயிர்வாழும்.

காதலின் வெற்றி அதன் தோல்வியில்தான்!...காதலின் வெற்றியினால் கிடைக்கும் சுகத்தைவிட, காதல் தோல்வியினால் கிடைக்கும் சோகம் சுகமானது.

அதனால் தான் காதலின் வெற்றியினால் பிறந்த காவியங்களை விட காதல் தோல்வியினால் பிறந்த காவியங்கள் காலகாலமாக உயிர் வாழுகின்றது.

*காதலைக் காதலிக்காதவர்கள்*
*தோற்றிருக்கலாம். ஆனால்*
*காதல் தோற்றதுமில்லை,*
*தோற்கப் போவதுமில்லை.*

★★★

இந்த றோஜா சஞ்சிகையின்
அழகான அச்சமைக்கு
அழகுசேர்க்கும் **தரமான**
**தமிழ் எழுத்துக்களை**
**உருவாக்கிய**
**"கரன் கிறாப்"**
**உரிமையாளர்**
சசி அவர்களுக்கு எமது
**பாராட்டுக்கள், நன்றிகள்.**

*~ ரிவிலா பப்ளிக்கேஷன்ஸ் ~*

இச்சஞ்சிகை "கரன் கிறாப்" தமிழ் எழுத்துக்களை மட்டுமே பாவித்து வெளியாகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடே.....நீ.....தம்பா.....

### பார்த்த ஞாபகமில்லையோ?.......





உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர்களால் நடாத்தப்பட்ட வானவில் - 94இல் இடம் பெற்ற "கனடாவில் சக்கடத்தார்" ஓரங்க நகைச்சுவை நாடகத்திலிருந்து.........

"சக்கடத்தார்......, என்ன செய்து கொண்டிருக்கிறீர் சக்கடத்தார்......"

"செல்லத்தத்தார்........, கிவ்.... மி.... எ மினிட்டு....."

"சக்கடத்தார்..... இது என்ன நடக்குது, எனக்கு ஒன்றுமாய் விளங்கல்ல......"

"செல்லத்தத்தார்...... நான் வோமப்..... பண்ணிக்கொண்டு நிக்கிறன்.... கிவ் மி எ மினிட்டு......"

"சக்கடத்தார்..... வாரும்... சக்கடத்தார் வாரும்... வாரும்......, என்ன சக்கடத்தார் ரக்கட்.... எல்லாம் தூக்கி...... என்ன..... நடக்குதிப்ப....."

"செல்லத்தத்தார்... எனக்கு டாக்குத்தர் சொல்லிப்போட்டார் High கொலஸ்ரோல் எண்டு, அது தான் நானிப்ப...... டெனிஸ் விளையாடுறன்....."

"ஆரோட.... சக்கடத்தார் இப்ப நீர்.... டெனிஸ் விளையாடுறீர்...."

"நான் இப்ப.... பீட்டரோட..... டெனிஸ் விளையாடுறன்...., நான் பந்தை.... அடிச் சால்..... பீட்டர் எடுத்துக்கொண்டுவந்து.... தருவார்........"

"அப்ப சக்கடத்தார்......., உங்கட வீட்டுக்கு..... பக்கத்தில இருக்கிற அந்த..... வெள்ளக்காரப்... பீட்டர் அவன்தானே?...."

"செல்லத்துறைக்கென்ன விசரே?......"

"அப்ப......"

"பீட்டர் எங்கட.... வீட்டு நா...ய்........"

"அதானே பாத்தன்; சக்கடத்தாரோட வேறையார்...... டெனிஸ் விளையாடிண வயலென்று.........., நா...ய்...........தான்"

"அதுதானே......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அப்ப... சொல்லுங்கோ சக்கடத்தார் கண்டு கனகாலம்....., அ.... எப்படி இருக் கிறீங்கள்........"*

"செல்லத்தத்தார்....., நான் Lifeஇல... Welloffஅ...... இருக்....கிறன்."

*"Well... offஆ.... இருக்கிறீரோ, அப்ப நல்ல வேலையில...., வீடு...., கார்......., எல்லாம் வாங்கி...... நல்ல Well offஆ... இருக்கிறீர்...."*

"செல்லத்தத்தார்...... அத...... நான்.... சொல்லேல்ல......., நான் Welloffஆ........ இருக்கிறன்."

*"அப்ப Welloff.... எண்டு....... எப்பிடி இருக்கிறீர் சொல்லுமன்......"*

"நான் Welfare இல........ off ஆ........ இருக்....கிறன்."

*"சக்கடத்தார் உங்களிட்டத்தான்........, நீங்கள் ஒரு அறிவான ஆள், நான் ஒரு விஷயம் ஒண்டு... கேட்கப்போறன். ஒருத் தருக்கும் சொல்லப்படாது....."*

"சொல்லுங்கோ....."

*"எனக்கு சக்கடத்தார்..... காலம..... வெள்ளன எழும்பி.... தலை இழுக்கேக்க கத்த....... கத்தயா.... தலமயிர் கொட்டுப் படுகுது, இதுக்கு என்ன செய்யலாம்...... எண்டு சொல்லுங்கோ...."*

"காலம வெள்ளன.... தலை.... இழுக் கேக்க........ மயிர் கத்த..... கத்தயா...... கொட்டுப்படுதே......"

*"ஓம் சக்கடத்தார்........ காலம இழுக் கேக்க கத்த.... கத்தயா கொட்டுப்படுது"*

"அப்ப... பின்னேரத்தில இழுங்கோ...."

*"உம்மட்ட....... அட்வைஸ் கேட்டன் பாரும்....., என்னை... செருப்பால அடிக்க வேணும்...."*

★★★

*"என்ன சக்கடத்தார்..... அண்டைக்கு ஏதோ..... HWYயில பிரச்சன கொடுத் திங்களாம், பொலிஸ் உங்கள....... Exit எடுக்கச் சொல்லி நிண்டதாம், என்ன..... சக்கடத்தார், என்ன நடந்தது....."*

"நான் HWYயில...., உங்களுக்கும்.... தெரிஞ்சுட்டுதே....., நான் HWYயில கார் ஓட்டிக் கொண்டு போனனான்...... உடன பொலிஸ்காரன் என்ன குறுக்க....... மறிச் சுப்போட்டார்."

*"அவர் ஏன்...... மறிச்சவர்...."*

"நான் கேட்டன்..... ஏன் எண்டு, அவர் சொல்லுறார்..... நீர் HWYயில 10 கிலோ மீட்டரில ஓடினால்....., ஒருத்தரும்...... HWYயால..... ஓடிறேலயோ எண்டு....."

*"அது கேட்டது சரிதான் பத்திலேயே போறது........, ஆ........"*

"நான் அதுக்கு சொன்னன்; HWY 10 எண்டுதானே..... எழுதிக் கிடக்கு..... அது தான் நான்..... 10 கிலோமீட்டரில...... ஓடினனான் எண்டு....."

*"அட....ட....ட, HWY 10 எண்டு..... கிடக்கு அதால..... நீர் 10இல.... ஓடினது எண்டு....."*

"ஓ......, உடன அவர் சிரி சிரி எண்டு சிரிச்சுப் போட்டு......., உடன Exit எடும் எண்டு பேசுறார்......."

*"அதுக்கேன்...... உம்ம...... Exit..... எடுக்கச் சொல்லி சொன்னவர்....."*

"அவர் சொன்னார்........ அங்கால...... HWY 400 வருது..........."

*"எட.....ட......ட....ட...ட"*

★★★

**தரமான நகைச்சுவைப் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்னிசை மழை!!"

**ஒரு ஆனி மாத மாலைப் பொழுதினிலே நகரின் மத்தியிலுள்ள மியூசிக்கல் ஹோலில் (Broadview Subway இற்கு அருகாமையில்) நடைபெற்ற ஜோஷ்வராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றிருந்தேன்.**

தமிழகத்தில் 1992 ஆம் ஆண்டு 'மதுரா ட்ரவல்ஸ்' நிறுவனத்தின் ஆதரவில் நடந்தேறிய 'மாபெரும் இசை விழா' நிகழ்ச்சிக்குப் பின்னணி இசை வழங்கியதன் மூலம் கடல் கடந்த நாடுகளில் வாழும் லட்சோப லட்சம் தமிழர்தம் நெஞ்சில் நிலைத்துவிட்டவர். இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட வாத்தியக் கலைஞர்களுடனும், தமிழ்த் திரையுலகின் பிரபல பின்னணிப் பாடகர்களுடனும் ஜோஷ்வராஜன் கனடாவுக்கு வந்திருந்தார். பத்திரிகைகள், வானொலிகள் மூலம் அவர் வருகையை அறிந்து கொண்ட இசைப்பிரியர்கள் மியூசிக்கல் ஹோலில் திரண்டிருந்தார்கள்.



நிகழ்ச்சி குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது. தமிழ் மரபை மீறி விடக் கூடாதென்று நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் நினைத்தார்களோ? என்னவோ?

மாலை 7.15 மணியளவில் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. ராகதேவன் ராகவேந்தர் "புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே..." என்ற பாடலுடன் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். கண்களை மூடிக்கொண்டு பாடலைக் கேட்ட போது அசப்பில் T.M.S பாடுவது போலவேயிருந்தது. ராகவேந்தர் அவர்கள் ஒரு சிறந்த நடிகரானபடியால் முகபாவமும், அங்க அசைவுகளும் அவருக்குக் கை கொடுத்தன. நிகழ்ச்சியை மிடுக்கான குரலில், ஜனரஞ்சகமாக தொகுத்து வழங்கியவர் 'கீதவாணி' நடா. R. ராஜ்குமார்.

ராகவேந்தரைத் தொடர்ந்து அடுத்த பாடலைப் பாடியவர் T.L. தியாகராஜன் 'மன்னன்' திரைப்படத்தில் K.J. ஜேசுதாஸ் பாடிய "அம்மாவென்றழைக்காத உயிரில்லையே..." என்ற பாடலைக் கேட்போரின் ஊனுருகும் வண்ணம் இசைத்தார். T.L. தியாகராஜனுக்கு அற்புதமான குரல்வளமிருக்கிறது.

நிகழ்ச்சி ஆரம்பமானதிலிருந்து ரசிகர்கள் கல்பனா! கல்பனா! என்று அழைக்க கல்பனா மேடைக்கு வந்தார். இருகரங்கூப்பி வணங்கினார். T.L. தியாகராஜனுடன் இணைந்து 'டூயட்' திரைப்படத்தில் ஒலித்த "அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி...." என்ற மதுர கீதத்தை தேன்சொட்டும் இனிய குரலில் பாடினார். பாடல் முடிந்ததும் ரசிகர்களின் கரவொலியால் மண்டபம் அதிர்ந்தது. ராகவேந்தரும், T.L. தியாகராஜனும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா வீடியோ

*NILA VIDEO* *(905) 472-9676*

திருமணம்!
அது வாழ்வில் வசந்தத்தின் வரவு......
அந்த நினைவுகள் உங்கள் வாழ்வில்
பசுமரத்தாணியாகப் பதிக்கப் படவேண்டியவை......
உங்கள் எண்ணங்களை நாங்கள்
வண்ணத்தில் பதித்துத் தருகிறோம்!......
புதிய **தொலைக்காட்சிக் கமரா** மூலம்
அவற்றை அழியாத ஓவியமாக்குகிறோம்.

அரங்கேற்றம், கலைவிழாக்கள் மற்றும்
மேடை நிகழ்ச்சிகள்
தரமான முறையில் பதிவு செய்து தரப்படும்!



**VICTOR**
**(905)**
**472-6976**

"இளைய நிலா"
தயாரிப்பாளர்

# NILA VIDEO


ரோஜா.

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**

# பொறிநுட்பம்

## PORINUDPAM

வாகனங்கள் திருத்தும் நிலையம்

Car Painting & Body Works

பெற்றோல், டீசல் வாகனங்களுக்கான சகல விதமான இயந்திர, மின்சார திருத்த வேலைகள்

வாகனங்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல் (Vehicle Inspected & Certified)

Computer வசதியுடனான திருத்த வேலைகள்

இறக்குமதி செய்யப்பட்ட, உள்நாட்டு வாகனங் களின் விசேட நிபுணத்துவம்

**435 BOWES RODE, UNIT 5**
**CONCORD, ONT. L4K 4A4**
**Tel: (416) 738-8360**

ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்பனாவும் பாடல்களை ரசித்துப்பாடி ரசிகர்களை தம்பக்கம் ஈர்த்தார்கள். அதுசரி! மலேசியா வாசுதேவனும் இசையரசி P. சுசீலாவும் இந்த இசை நிகழ்ச்சியில் பாடுவதாக இருந்தது. அவர்கள் வராததன் காரணம் என்னவோ? நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்களுக்குத்தான் வெளிச்சம்.

பழைய, புதிய ஹிட் பாடல்கள் நிகழ்ச்சியில் இடம்பெற்றன. இசை ஒரு உலகப் பொதுமொழி மட்டுமல்ல தெய்வாம்சம் பொருந்தியதுமாகும். இத்தகையை கீர்த்தி வாய்ந்த இசையை ஜனரஞ்சகமாக வெளிப் படுத்துவது ஒரு கலையாகும்.

ராகவேந்தரும், கல்பனாவும் (தந்தையும், மகளும்) பாடிய "சின்னஞ் சிறிய வண்ணப் பறவை என்னத்தைச் சொல்லுதம்மா....." பாடல் இதற்குச் சான்று பகர்வதாக அமைந்திருந்தது. T.M. சௌந்தராஜன், S. ஜானகி இருவரும் 'குங்குமம்' படத்திற்காக சுரத்தால் நிறைந்த பாடலை தந்தையும், மகளும் உச்சஸ்தாயியில் பாடினார்கள். பாடியதோடு சுரங்களால் மேடையமைத்து அதில் ரசிக உள்ளங்களை ஆடவிட்டார்கள். இவர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.



ஜோஷ்வராஜன் தலைமையில் பின்னணி இசை வழங்கிய அனைத்து வாத்தியக் கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள். முப்பது வருடங்களுக்கும் மேலாக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை வழங்கிய பின்னரும் கர்வமென்றால் என்னவேன்றே அறியாது புன்னகையோடு மேடையிலே தோன்றிய ஜோஷ்வராஜன் கலைஞர்களுக்கு ஓர் உயர்ந்த எடுத்துகாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

இசைநிகழ்ச்சி ஒன்று வெற்றிகரமாக அமைய ஒலியமைப்பு இன்றியமையாததொன்றாகும். அந்தப் பணியைச் செவ்வனே செய்தவர் 'ஈழத்து மெல்லிசை மன்னர்' M.P. கோணேஸ். ஒரு இசையமைப்பாளரின் நிகழ்ச்சிக்கு இன்னொரு இசையமைப்பாளர் ஒலியமைப்புச் செய்து பக்கபலமாக நின்றது மனமாரப் பாராட்டப்படவேண்டிய விடயமே.

இடைவேளையின் பின்னரும் ரசிகர்களை இசைவெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தார் ஜோஷ்வராஜன். ராகவேந்தர் அவர்கள் சிவாஜி படப் பாடல்களைப் பாடும்போது சிவாஜியைப் போலவே மேடையிற் தோன்றி உணர்ச்சி பாவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடினார். ராகவேந்தரின் மனைவி சுலோஷனாவும் ஓரிரு பாடல்களை நிகழ்ச்சியில் பாடினார்.

T.L. தியாகராயனுக்குப் பெரிய அளவில் புகழ் சேர்த்த பாடல் 'பொம்பளை மனசு' படத்தில் ஒலித்த "அமுத மழை பொழியும் முழு நிலவிலே...." ஆகும். இந்தப்பாடலை அவர் பாடிய போது மண்டபத்தில் தமிழ் அமுத மழை பொழிந்தது. திருச்சி லோக-நாதன் பாடிய ஆசையே அலைபோலே பாடலையும் தந்தையின் குரலில் பாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க கல்பனா ஒரு பங்காரா பாடலைப் பாடினார். குரலை மாற்றிப் பாடுவதிலும் தான் வல்லவர் என்பதை கல்பனா நிரூபித்தார். பதின்மூன்று வயது நிரம்பிய கல்பனாவிடம் இத்தனை திறமையா? வளரும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். கல்பனாவுக்குப் பிரகாசமான எதிர்காலம் கண்முன்னே விரிந்து கொண்டிருக்கிறது.

திட்டமிட்டபடி எல்லாப் பாடகர்களும் கனடாவுக்கு வந்திருந்தால் நிகழ்ச்சி இன்னும் சிறப்பானதாக இருந்திருக்குமல்லவா? என்று வினவிய போது ஆதங்கத்துடன் கூடிய அவரது தலையசைப்பு பல பதில்களை வெளிப்படுத்தியது. மொத்தத்தில் ஜோஷ்வராஜன் குழுவினரின் இசை நிகழ்ச்சியை மனந்திறந்து பாராட்டலாம்.

*~ எஸ். பாலச்சந்திரன் ~*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எந்த ஹீரோவும் இதை செய்யமாட்டார்"

~ கோவை சரளா ~

# சினிமா... சினிமா...

நம்மவரைத் தொடர்ந்து கமல் ஹாசன் அடுத்து நடிக்கும் படம் 'சதி லீலாவதி' கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிக்கும் இந்தப் படத்தில் ரமேஷ் அரவிந், ஹீரா இணைந்து நடிக்க திரைக்கதை யமைத்து, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, இயக்கம் ஆகியவற்றை பாலுமகேந்திரா கவனிக்கிறார்.

கமலுக்கு இணையாக நடிப்பவர் யார் தெரியுமா?! கோவை சரளா! நகைச்சுவை நடிகை கோவை சரளா கமலுக்கு இணையாக நடிக்கிறாரா? என்ற எல்லோருடைய ஆச்சரியத்திற்கும் கோவைசரளாவிடமிருந்து......





"கதாநாயகியாக திரையுலகை கலக்க வேண்டுமென்ற முடிவிலிருந்த எனக்கு 'பிரேமானு ராக' என்ற கன்னடப் படத்தில் இரண்டு வேடத்தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு 1983இல் கிடைத்தது. படமெல்லாம் முடிந்துவிட பணப்பிரச்சனையால் படம் இன்றுவரை வெளியாகவில்லை. நான் எதை நினைத்து வந்தேனோ அது கிடைக்கவில்லை எனும் போது, கிடைக்கிற வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தேன். அந்த முடிவுதான் என்னை முன்னூறு படங்களுக்கும் மேலாக நடிக்க வைத்து, நகைச்சுவையில் முன்னணி நடிகையாக்கியது. ஒருவேளை நான் கதாநாயகியாக நடித்திருந்தால்கூட, மூன்று வருடங்களிலேயே முகம் தெரியாமல் போயிருக்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதிகா, ரேவதி போல் நிலைத்திருக்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைக்குமா என்ன?

★★★

கமல் சாரோடு ஜப்பானில் கல்யாணராமன், காதல்பரிசு, உயர்ந்த உள்ளம், நம்மவர் ஆகிய படங்களில் நடித்திருக்கிறேன். ஆனால் சதிலீலாவதியில் அவருக்கு இணையாக நடிக்கக் கிடைத்த வாய்ப்பை இன்னும் கனவென்றே நினைத்துக் கொண்டு, என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொள்கிறேன். இந்த மாதிரி ஒரு வாய்ப்பு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக வந்தது ஆனால் அது காரணம் தெரியாமலேயே கைவிட்டுப் போனது.

★★★

இப்போது அந்த வாய்ப்பு கமல் சார் மூலம் ஈடேறியிருக்கிறது. என்னை ஜோடியாக வைக்கலாமா என்று அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்த போது அது எனக்கு மனதில் பல எண்ணங்கள்.... இந்த வாய்ப்பு எப்படிக் கிடைக்கும்?

பாலுமகேந்திரா ஒத்துக் கொள்வாரா? அப்படியே இவர்கள் ஒத்துக் கொண்டாலும் சுற்றியிருப்பவர்கள் அந்த முடிவை ஏற்றுக் கொள்வார்களா. இந்தக் கேள்விக் குறியெல்லாம் களைத்தெறிந்து ஆச்சர்யக் குறியாக்கிய கமலுக்கு என் ஆயுள் உள்ளவரை நன்றி சொல்வேன்.

இந்தியாவின் தலை சிறந்த நடிகர், ஒரு காமெடி நடிகையோடு நடிக்க விருப்பம் தெரிவித்தது ஒரு பெரிய விஷயம். எந்த ஹீரோவும் இதை விரும்ப மாட்டார்.

★★★

எதையும் வித்தியாசமாக சிந்திக்கும் கமல், இதிலும் தான் விதிவிலக்கு என்பதை நிரூபித்து விட்டார். இந்த வாய்ப்பு கிடைத்ததில் எனக்கே கூட வியப்பு. காமெடி செய்பவர்களும் மனிதர்கள் தானே? இதை ஏன் பலரும் நினைத்துப் பார்ப்பதில்லை, சர்க்கஸில் பபூனுக்குத்தான் மவுசு என்பதை மறந்து விடுவது ஏன்?

★★★

சதிலீலாவதி படத்தில் இடம்பெறும் மாறுகோ மாறுகோ... பாடலில் தான் முதன் முதலில் கமலோடு இணைந்து நடித்தேன். கமல் பற்றி நான் பலவாறு நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் கலகலப்பாக பேசுவாரா மாட்டாரா? அதிகம் பேசமாட்டார் என்கிறார்களே குறை கண்டு பிடிப்பவரா? இந்த எண்ணமெல்லாம் அவருடன் முதல் காட்சியில் நடித்து முடித்ததுமே தூள் தூளானது. மென்னையான குணமும், காட்சியைப் பற்றி நம்மிடமும் கலந்தாலோசித்து நடிக்கிற தன்மையும்... இவ்வளவு எளிமையானவரை எப்படி... அப்படி நினைத்தோம் என்று வருந்தினேன்.

★★★

கமல் சாரைப்பற்றி நான் என்ன நினைத்து வைத்திருந்தேன் என்பதை அவரிடம் சொன்னபோது... "என்னைப் பார்த்தால் அப்படியா தோன்றுகிறது" என்று குழந்தைத் தனமாகக் கேட்டார். 300 படங்களுக்குமேல் நடித்தும் சதிலீலாவதிக்குப் பிறகு பலரும் புதுமுகம் போல் என்னைப் பார்ப்பதும் பேசுவதும் என்னை நானே திரும்பிப் பார்த்துக் கொள்கிற மாதிரி உணர்வு ஏற்படுகிறது. இது கமலால் கிடைத்தது என்பதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்கிறேன்" என்றார் நன்றியுடன் கோவை சரளா.

# நான்  டு ரசித்த காட்சி

சமீபத்தில் வெளியான 'சின்ன புள்ள' திரைப்படம் பார்த்தேன். சின்னி ஜெயந்தின் வித்தியாசமான நடிப்பில் படம் விறுவிறுப்பாகவே இருந்தது. நகைச்சுவை நாயகர்களில் ஒருவரான சின்னிஜெயந்த் நகைச் சுவையினால் சிரிக்க வைக்க மட்டு மல்ல சிறந்த நடிப்பினால் பார்ப்பவர்களை வியக்க வைக்கவும், கண்களிலிருந்து நீர் சொட்ட வைக்கவும் தெரிந்தவர்.

'வள்ளி இரு நாட்களுக்கு தனது வீடு சென்று வந்து விடுவதாக தாய் சொல்வதற்கு தலையாட்டி விட்டு, வள்ளியைக் காணாது துடித்துப் போகிறான். தாயிடம் வள்ளியை வாங்கித் தரும்படி கேட்க, தாயும் உடன் படுகின்றாள். அது நிறைவேறாமையினால் வேறு வழியில்லாமல் பாறைச் சாமியில் தன் தலையை மோதி மண்றாடுகிறான். தாய்வந்து தடுத்தும் தாயை



தள்ளி விட்டு தன் தலையை பாறைச் சாமியில் மோத ஓடி வரும்போது தாய் இடை நின்று கொண்டு தன் நெஞ்சில் மோதும்படி கூறும்போது "எனக்கு வள்ளி வேணும்..... எனக்கு வள்ளி வேணும்..." என்று சொல்லிக்கொண்டு அவன் பின்னோக்கிச்செல்லும் அந்தக் காட்சியே நான் கண்டு ரசித்த காட்சி.

~ சாந்தி ~ (மொன்றியல்)

## ராகதேவன் கண்டுபிடித்த "புதிய ராகம்"



இளையராஜாவின் இசைப்பயணத்திலே மைல்கல் சாதனைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. குறுகிய காலத்தில் எழுநூறு படங்கள்... சிம்பொனி போன்ற சாதனையை அடுத்து கர்நாடக இசையில் புதிய ராகம் ஒன்றைக் கண்டு பிடித்து அதற்கு பஞ்சமுகியெனப் பெயரிட்டிருக்கிறார். இவரது ஒட்டுமொத்த சாதனைகளை பாராட்டி இசை ஆராய்ச்சி மையமான நாதபரம்மம் 'நாத கலாஜோதி' பட்டத்தை வழங்க இருக்கிறது.

*முயன்றுபாருங்கள்!*

க_ __ _ _ _ __ _ ள்

இது பாரதிராஜாவின் இயக்கத்தில் உருவான படங்களில் ஒன்று...

சினிமா சினிமா கேள்வி:

*'பாண்டியன்' படத்தில் "பாண்டியனின் ராஜ்ஜியத்தில்..." என்ற பாடலை இசையமைத்தவர் யார்?*

*உங்கள் பதில்களை பெப். 10, 95க்கு முன்னர் கிடைக்கக்கூடியக அனுப்பிவையுங்கள்*

சென்ற இதழுக்கான சினிமா சினிமா பதில்:

**'ராஜகுமாரன்'**

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: *சி. குலசிங்கம் (ரொறன்ரோ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AUTO MECHANIC SHOP



உங்களின் சகல விதமான
திருத்த வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்.
உங்கள் மனநிறைவுக்கு
நாங்கள் உத்தரவாதம்.

- Tune-up
- Brakes
- Transmission & Engines rebuilt
- Air-Condition
- Body Work


Domestic,
European &
Japanese
car & Vans.

We are
specialized in
HONDA

**IRIE CA SERVICES**

**86 MELFORD DR, UNIT.5,**
**SCARBOROUGH, ONT.**

**தொடர்புகளுக்கு:~**
*S. Ruban*
**(416) 299-0452**




ரோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.R.K MARKET

**31-35 ST. DENNIS DR, DON MILLS (Don Mills & Eglinton)**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்

பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்

இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்

கனேடிய
உணவுப் பொருட்கள்

தமிழ், கிந்தி வீடியோ திரைப்படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்,
விற்பனைக்கும் பெறலாம்

*CD, Audio*
மலிவு விலையில்

**Tel: (416) 421-3429**

**ஏ.ஆர்.கே மார்க்கட்**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

# S.K. BALES DRIVING SCHOOL

★ குறுகிய காலத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் சித்திய டைந்த ஒரே ஒரு ஸ்தாபனம் - இதற்கு எம்மிடம் உண்டு ஆதாரம்.

★ 95% வீதிப்பரீட்சையில் சித்தியடையச் செய்யும் கடினமான வேலைக்கு எமது பாடசாலை பொறுப்பு; சாதாரண 5% உங்களின் உழைப்பு

★ 41% வாகனக் காப்புறுதி கழிவுச் சான்றிதழ் விரைவில் தரப்படும்

**2627 Eglinton Ave. East**
**Suite # 3 & 5**

**Bus: (416) 265-1297**
**Res: (416) 265-3920**

**எஸ். கே. பாலேஸ்**
(O.S.L)
(ஒன்றாறியோ பாதுகாப்புச் சபையில் அங்கீகாரம் பெற்ற மிகச் சிறந்த சாரதிப் பயிற்சியாளரும், முன்னாள் ஸ்கந்தா ஆசிரியரும்)


ரோஜா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா


## ★★ நம்பிக்கை நற்சித்திரம் ★★

*எமது வளர்ந்துவரும் சந்ததியினரை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட "நம்பிக்கை நற்சித்திரம்" என்ற இப்பகுதியில்....*

JOHN XXIII *கத்தோலிக்கப் பாடசாலையில் திறமையான மாணவர்களில் ஒருவரான ஹரிகரன் தன்னைப் பற்றி இங்கு கூறுகிறார்....*

1982-1-1 பாலராசா சரஸ்வதிக்கு இரண்டாவது மகனாய்ப் பிறந்தேன். என் பெயர் ஹரீகரன். எனக்கு ஒரு அண்ணனும், ஒரு தம்பியும் உள்ளனர். அண்ணா பெயர் காண்டீபன், தம்பி பெயர் கார்முகன். எனது ஆரம்பக் கல்வி மானிப்பாய் சுதுமலை தமிழ்க் கலவன் பாடசாலையில் தொடங்கப் பட்டது. ஆண்டு மூன்றுவரை அங்கு படித்தேன். ஆண்டு நான்கும், ஐந்தும் கொழும்பில் சிலேவைலென்ற் தமிழ் மகா வித்தியாலயத்தில் படித்தேன்.

சிறு வயதிலிருந்து பேச்சு, நாடகம், கட்டுரை, பொதுவிவேகம் என்பவற்றில் பங்கு கொண்டு பல பரிசுகள் பெற்றுள்ளேன். தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் கூடத்தான். எனது முதல் பேச்சு "தந்தைக்கு உபதேசம் செய்த மகன்" என்ற தலைப்புடையது. இதற்குப் பரிசு மட்டுமல்ல பெரியோர்களின் பாராட்டும், பல மாலைகளும் பரிசாகக் கிடைத்தன. நான் முதல் நடித்த நாடகம் 'குரங்கும், தொப்பி வியாபாரியும்'. இதில் தொப்பி வியாபாரியாக நடித்தேன். அப்போ



எனக்கு வயது ஐந்து. பலரின் வேண்டுதலுக்கிணங்கி அதே மேடையில் பாடி நடித்தேன்.

கொழும்பிலும் கட்டுரை பேச்சு இரண்டிலும் பரிசுகள் பெற்றேன். My Pet ஐப் பற்றி எழுதி 1ஆம் இடம் கிடைத்தது. 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தேன். றோயல் கல்லூரி எனக்குக் கிடைக்க விருந்தது. அதில் கல்வியிலும் அதிஷ்டம் இல்லாமல் கனடா வந்தேன். இங்கு ஆங்கிலம் எமது படிப்புக்கு இடைஞ்சலாய் அமையவில்லை. கொழும்பில் இருந்த ஒன்றரை வருடமும் Mrs. உத்தரியநாதனும், Mrs. சந்திரப் பெரேராவும் நன்றாய் ஆங்கிலம் படிப்பித்தார்கள். வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியப்பாவும் ஆங்கிலத்தில் பேசுவார். இவர்களின் பெரிய உதவியால் இவ்விடமும் கல்வியில் முன்வர முடிந்தது.

இவ்விடம் என்னைப் பல மேடைகளில் அறிமுகம் செய்வித்த பெருமை கனம் திருமதி. சரஸ்வதி கணேஸ்-வரனைச் சார்ந்ததே. Mrs. செல்வ-ராசா ஆசிரியரும் பல உதவிகள் செய்தார். இவர்களுக்கு எனது நன்றிகள்.

இங்கு பல மேடை நாடகங்களிலும், பேச்சுக்களிலும் கலந்துகொண்டுள்ளேன். எமது பாடசாலையில் கூட கிறிக்கட்டைப் பற்றி நானே எழுதிப் பேசி எனது வகுப்பில் முதலாம் இடம் பெற்றேன். எனது வகுப்பில் தமிழ் பிள்ளைகள் இரண்டோ மூன்றுதான். அண்மையில் உலகத் தமிழர் மகளிர் அமைப்பு நடத்திய பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் எடுத்துக் கொண்டேன்.

எனது 12ஆம் வயதில் கோவலன் கண்ணகி நாடகத்தில் கண்ணகியாய் நடித்தேன். ஆத்மஜோதி முத்தையா ஆசிரியர் அவர்கள் கனடா வந்தபோது நடித்தேன். இதைக் குறை கூறி எழுதியிருந்ததை ஒரு பத்திரிகையில் பார்த்தேன். நான் சிறுவன் ஆனாலும் புத்தகங்கள், பத்திரிகைகள் நல்லாய் படிப்பேன். மாணவர்களாகிய எம்மை தட்டி எழுப்பாமல் தட்டியமர்த்த நினைத்த தமிழ்ப் பெரியார்களை எப்படிப் பாராட்டுவது. ஆனாலும் நான் கவலை கொள்ளவில்லை. இரண்டாம் தடவை கண்ணகியாக மேடை ஏறினேன். பாராட்டுகள் கொஞ்சமல்ல.

இவ்விடம் முதல் மொழி ஆங்கிலம். அது என் உத்தியோக தேவைக்கு மட்டும் போதும். எனவே இவ்விடம் எமது தாய் மொழியை நான் மறக்க



விரும்பவில்லை. தமிழ் மொழியை நன்றாய்ப் படித்து அறிய ஆசைப் படுகிறேன். இதற்குப் பல ஆசிரியர்களின் உதவிகள் கிடைக்கின்றன. திருமதி. கணபதிப்பிள்ளை, திருமதி. வள்ளிநாயகி, திருமதி. சரஸ்வதி கணேஸ்வரன், திருமதி. செல்வராசா இப்படி இன்னும் பலரின் உதவியுடன் தமிழை ஆழமாகப் படிப்பேன். நாம் எங்கு சென்றாலும் தாய்மொழியாம் தமிழ்மொழியை மறக்கக்கூடாது.

எனது திறமைகளை 'ரோஜா' சஞ்சிகையில் வெளியிட்டு மேலும் என்னை ஊக்கப்படுத்துவதற்கு என் நன்றிகள்.

**உங்கள் சிறுவர் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சங்கள்

~ *B.R. ரஞ்சனி* ~

அடுத்த நாள் மாலை ரியூசன் வகுப்பில் ராஜிக்கு இருப்புக் கொள்ளவில்லை. சூர்யா வந்திருப்பானா? எத்தனை உயரம் அழகு இந்த சூர்யாவுக்கு. நான் நினைத்திருப்பதுபோல் சூர்யா கூட என்னைப்பற்றி நினைப்பானா?.... ஆசிரியர் படிப்பித்த விலங்கியல் பாடம் ஏறவில்லை. நேற்றைய முன்தினம் கண்ட சூர்யாவே அவள் மனக்கண்ணில்.....

அழகான கவர்ச்சியான கண்கள் ஆண்களுக்குக் கூட இருக்குமா....? சூர்யாவிடம் இருக்கிறதே நீண்டநாசி, சுருள் சுருளான கேசம், அழகாக அரும்பத் தொடங்கிய மீசை, சிரிக்கும் போது இருக்கும் அழகு மானிறத்தோடு எத்தனை அழகாகவும்....., அடக்கமுள்ளவனாகவும்...... இருக்கிறான்.

ஏன் நான் இவனைப் பற்றியே சிந்திக்கிறேன். எத்தனை பேர் என் பின்னால் பல்லை இளித்தபடி திரிகிறார்கள்...., அவர்கள் யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத நான் இந்த சூர்யாவைப் பார்த்தது தொடக்கம் தவிப்பது ஏன்?....., நான் ஏன் இப்படி என்னையே இழந்தேன். ராஜியின் சிந்தனை தொடர்ந்தபடி இருந்தது.

"ராஜி உம்மைத்தான் இதற்கு விடை என்ன? சொல்லும்"..., ஆசிரியர் கேட்டுக் கொண்டிருந்தார். ராஜிக்கு கேள்வியே தெரியவில்லை, இதில் விடை என்னவென்று கூறுவாள்.

வகுப்பில் ஆசிரியர் கேட்டதும் கேள்விகளுக்கு பட்டென்று பதில் சொல்பவள் றாகினி. அத்தோடு வகுப்பில் கெட்டிக்காரியென்று பெயரெடுத்தவள். இன்று இவளுக்கென்ன நடந்தது. "ஏன் ராஜி சுகமில்லையா?.... தலை இடிக்கிறதா?... கேட்டார் ஆசிரியர்.



"ஆமாமம் sir தலையிடிக்கிறது....." சொல்லியபடி இதுதான் சாக்கென்று மேசையில் கவிழ்ந்தாள். ஆசிரியர் ராஜியை அனுதாபமாகப் பார்த்தபடி மற்றவர்களிடம் கேள்வி கேட்கத் தொடங்கினார்.

வகுப்பு முடியும் வரை அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. "ஏன்டி சூர்யா நினைவா?..." கிள்ளனாள் மேகலா.

வகுப்பு முடிந்து வெளியே வந்தார்கள். "என்னடி ராஜி உன்னைப் பார்த்தல் வருத்தம் வந்த மாதிரித் தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையேடி.....; ஏதோ பறிகொடுத்த மாதிரியல்லோ இருக்கிறாய்.....; sir ஐ ஏமாத்தினமாதிரி எங்களை ஏமாத்தேலா தடி.... என்னடியாச்சு?...." சுமித்திரா கேட்டதற்கு, "ஒன்றுமில்லையடி......." என்று மழுப்பினாள்.

"அது சரியடி சுமி இன்று சூர்....யா..... வந்தாரா?...."

"அடி சக்கை. இதுதானா விஷயம்..... அவரா.. யாரடி அவ...ர்?......"

"அடி போங்கடி பட்டிமன்ற தலையங்கம் தாறேன் என்றார். அதுதா.....ன்...." இழுத்தாள் ராஜி.

"அதற்கிடையில் தருவானா. ஏன்டி அவதிப்படுகிறாய். அவனைப் பார்ப்பதற்குத் துடியாய் துடிக்கிறாய்...... சொல்லு அவனிலை உனக்கு விருப்பமென்றால் தூது போறம்...." சீண்டினார்கள்.

ராஜிக்கு எல்லார்மேலும் எரிச்சலாக இருந்தது. என்றாலும் அவர்கள் குறும்பை அவள் ரசித்தாள். சூர்யாவோடு அல்லவா அவளை சீண்டிப் பார்க்கிறார்கள்.

"போங்கடி... நான் போறன்." பொய்க் கோபம் கொண்டு சிணுங்கியவளாய் ரியூசன் வாசலை கடந்தாள். மற்றவர்களும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

அப்போதுதான் கவனித்தார்கள் சூர்யா நிற்பதை. நண்பர்கள் புடைசூழ சைக்கிள்களில் அமர்ந்து கால்களை நிலத்தில் உன்றியபடி அனைவரும் கதைத்துக் கொண்டிருந்தனர். சூர்யா இவர்களைக் கண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. ராஜியும் தோழியர்களும் அவர்களைக் கடக்கும் வரை இவர்கள் பக்கமே அவன் திரும்பவில்லை. நண்பர்களுடன் அரட்டையடித்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

ராஜிக்கு அவன் பாராமுகம் ஆத்திரமாகவும், அவமானமாகவும் இருந்தது. இதில் அர்த்தமில்லை என்று தெரிந்தாலும் எரிச்சல் எரிச்சலாக வந்தது சூர்யாவின்மேல். நண்பிகளுக்கு அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. யாவரும ஒன்றும் பேசாது நடந்தனர்.

"இரவு ராஜிக்கு நித்திரை வரவில்லை. தன்மீது வெறுப்பாக இருந்தது. மனம் ஏன் இப்படி இதை நினைத்து சண்டித்தனம் செய்கிறது. அம்மா, அப்பா கூட ராஜியைக் கேட்டு விட்டார்கள் உடம்புக்கு என்னவென்று. என்னவென்று சொல்லுவாள் ராஜி. தன் மனதில் இருப்பதையா அல்லது சூர்யாவின் பாராமுகத்தையா. நல்ல காலம் அண்ணா இங்கில்லை. அவனும் இங்கிருந்தால் தன்பங்கிற்கு ஏதாவது கேட்டிருப்பான். அல்லது விளையாட்டாக அவளை சீண்டியிருப்பான்.

அண்ணா மேல் ராஜிக்கு கொள்ளை அன்பு. அவன் கூட ராஜி மேல் மிகுந்த அன்புடையவன். ராஜி சிலவேளை அண்ணனை "டேய் ராஜா" என்று கத்திக் கூப்பிடுவாள், அதற்கு அவன் "அடிக்க முதை வாய் உனக்கு வரவர நீளுகிறது. உதை வாங்கப் போறாய்......." என்று செல்லமாக அதட்டுவான்.

ராஜா, ராஜி போலவே படிப்பில் கெட்டக்காரன். இரண்டு பேருக்குமிடையே ஆறு வயது வித்தியாசம். கொழும்பு மத்திய வைத்திய சாலையில் இப்போது தான் டாக்டராக சேர்ந்திருக்கிறான். அவன் இப்போ இங்கிருந்தாலாவது ராஜி சூர்யாவின் நினைப்பிலிருந்து மீண்டிருக்கலாம்.

"ஏன் சூர்யா அப்படி நினைக்கிறான். ஏன் இந்த அலட்சியம். நிச்சயம் அவன் எங்களைப் பார்த்திருப்பான். ஆனால்...., ஒருவேளை நண்பர்களுடன் நின்றதால் தான் எம்மைப் பார்க்காதது போல் நின்றானா.....; ஆமாம்... அப்படித்தான் இருக்கும்." தனக்குத்தான் சமாதானமும் கூறிக்கொண்டாள். என்றாலும் எரிச்சலாக இருந்தது. புரண்டு புரண்டு விடியற்காலையில் தான் கண்ணயர்ந்தாள்.

மறுநாள் காலை தாய் கூப்பிட்டும் நித்திரையால் எழவில்லை. ஏனிப்படி ராஜி படுத்திருக்கிறாள் பள்ளிக்கூடம் போகா

மல். தலையிடியோ அல்லது காய்ச்சல் காய்கிறதோ. ஆனால் காய்ச்சல் போல் தெரியவில்லை. தாய்க்கு கவலையாக இருந்தது. மெதுவாக தாய் ராஜியின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அப்போதுதான் ராஜி திடுக்குற்று கண் விழித்தாள். நேரம் பத்தாகி விட்டது.

"மை காட்" இத்தனை நேரமா நான் தூங்கினேன் school கூடப் போகாமல்....."

"ஏனம்மா என்ன செய்யுது. கண்ணெல்லாம் சிவந்திருக்கு....." தாய்க்கு ராஜி அப்படிப் படுத்திருப்பது தாங்கமாட்டாதிருந்தது. "எழுந்திரு ராஜி நான் கோப்பி கொண்டு வாறன். குடிச்சிட்டு ஆறுதலாக முகம் கழுவலாம்." தாய் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

மாலை ராஜி ரியூசனுக்குச் செல்லவில்லை. நண்பிகள் வந்து அழைத்தும் போகவில்லை. சாட்டுச் சொல்லி சமாளித்து விட்டாள்.

"என்ன ராஜி என்ன நடந்தது....." தந்தை கேட்டார்.

"ஒன்றுமில்லையப்பா ஒரே தலையிடியாக இருக்கிறது. அதுதான்......" இழுத்தாள்.

"பனடோல் போட்டாயா?... போட்டுப் படுத்தெழும்பினால் சரியாப் போகும். போய்ப் போடம்மா...." அன்பாக அவள் தலையைத் தடவினார்.

"சரியப்பா......." சொன்னாளே தவிர அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

தந்தையும் தாயும் வெளிமுற்ற மரநிழலடியில் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். ராஜி மெதுவாக பின் தோட்டப்பக்கமாக நடந்தாள். கிணற்றில் நீரிறைத்து சில்லென்ற நீரினால் முகத்தை அலம்பினாள். சில்லென்ற நீர் முகத்தில் பட்டதும் சுறுசுறுப்பாக இருந்தது.

ராஜினி தோட்டத்தைப் பார்த்தபடி உலாத்தினாள். தோட்டத்து மலர்கள் தந்த குளிர்ச்சியும், வாசனையும் மனத்திற்கு மிகவும் பிடித்தமாகவிருந்தது. "க்விக்... க்விக்...." பறவைகள் இரண்டின் சத்தம் கேட்டது. எங்கே அவைகள் இருந்து குரல் கொடுகின்றன என்று அண்ணார்ந்து பார்த்தாள். மாமரக் கிளையொன்றில் இரண்டும் அமர்ந்து தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனவா. ராஜி அவைகளைப் பார்த்தபடியே நின்றாள்.

இவைகள் தங்கள் பாசையில் என்னதான் பேசிக்கொள்ளும். அன்பாக என்ன மாதிரி தங்கள் அன்புகளைப் பரிமாறிக் கொள்கின்றன. இவைகள் இரண்டும் நிச்சயமக காதலர்களாக இருக்கும் இவைதானே 'லவ் பேட்ஸ்'. இதில் எது ஆணாக இருக்கும், ஒன்று நீலம் மற்றது பச்சை. இதில் எது ஆண் நீலமாகத்தான் இருக்கும். அத்தோடு கொஞ்சம் குண்டாகவும் கம்பீரமாகவும் இருக்கறது. பெண்குருவி என்ன வெட்கப்படுகிறதா?........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாறியா நாமிருவரும் மறைவிடத்திற்கு போவோம்" என்று ஆண்குருவி கேட்க, "மாட்டேன் வெட்கமாக இருக்கிறது" என்று பெண்குருவி சொல்கிறதா. தனது கற்பனையை நினைக்க சிரிப்பாக இருந்தது ராஜிக்கு. "ஹேய்" என்று வாயெடுத்தாள், பிறகு வாயை மூடிக்கொண்டாள் அவைக்கு இடைஞ்சலாக போய்விடுமே.

அங்காலே நடந்தாள். "என்ன ராஜியா, இன்றைக்கு ரியூசன் இல்லையா, அல்லது போகவில்லையா? முகமெல்லாம் வாடியிருக்கிறது." விசாரித்தாள் பக்கத்து வீட்டு மாமி.

"ஒன்றுமில்லை மாமி லேசா தலையிடி இப்போ O.K. ஆமா நீங்க என்ன செய்யிறீங்க..." கேட்டபடி மதிலருகே சென்றாள்.

"அண்டைக்கு நீ நல்லா மேடையிலே பேசினியாம், பரிசெல்லாம் கூட எடுத்தியாம், பிரேம் சொன்னான்". ராஜி அதற்கு சிரித்தாளே தவிர பதில் கூறவில்லை.

"ராசாத்தி" வீட்டினுள்ளேயிருந்து மாமியின் மாமா குரல் கேட்டது. "வாறன் ராஜி" என்று மாமி கூறிவிட்டு நடந்தார்.

நல்லகாலம் அறுக்காமல் விட்டுது, இல்லா விட்டால் இதிடம் இருந்து தப்ப முடியாது.

பிரேம் சொன்னானா..... ஆமா அன்று பிரேமைப் பார்த்தேனல்லவா மறந்து விட்டது. பிரேமை சூர்யாவுடன் ஒப்பிட்டாள். பிரேம் கூட அழகானவன் தான்; என்றாலும் அவனிடத்தே பெண்மைத் தனமிருந்தது. அவன் அண்ணாவின் வயதொத்தவன், கம்பனி ஒன்றில் மனேஜராக இருந்தான். ராஜியின் மேல் அவனுக்கொரு கண். ராஜி எங்கு சென்றாலும் எதிர்பாராமல் அவள் முன் எதிர்ப்படுவான். வீட்டிற்குக் கூட அடிக்கடி வருவான். ராஜி ஓரிரு கதையுடன் அகன்று விடுவாள்.

இன்னும் இருள் முழுமையாக கவியவில்லை. அட தெரியாமல் ரியூசனுக்குப் போகாமல் விட்டோமே. என்ன படிப்பித்திருக்கிறார்களோ, சுமியிடம் நோட்ஸ் வாங்கிப் பார்க்க வேணும். யோசித்தபடியே அவள் கால்கள் அவளையுமறியாது வீட்டு கேற்றடி நோக்கி நடந்தது. ஒருவேளை சூர்யா இந்தவழியாகப் போனால், மனம் தன்னையுமறியாது கற்பனை செய்தது.

சுமி, மேகலா கிளாஸ் முடிந்து வெளியே வந்தார்கள். "ஒரு நிமிஷம்" கூப்பிட்டான் சூர்யா.

"நீங்களா நேற்று ஏன் எம்மைப் பார்த்தும் தெரியாதது போல் நின்றீர்கள். ராஜி எவ்வளவு கவலைப்பட்டாள் தெரியுமா..."



"கவலையா எதற்கு..." சூர்யாவுக்கும் ஏன் எதற்கு என்று அறிய ஆவல்தான், என்றாலும் எப்படிக் கேட்பது, அதுவும் இவர்கள் ஏற்கனவே வாலுகள். இதுகளிடம் கேட்கப் போனால் வேறு வினையே வேண்டாம்..... என்று தனக்குள்ளேயே நினைத்தவன், "அப்படியொன்றுமில்லை உங்களுடன் அந்த நேரத்தில் கதைத்திருந்தால் என்னுடன் நின்றதுகள் கதை கட்டி விடுங்கள். ஏன் வீண் பிரச்சனை என்றுதான் இருந்து விட்டேன்." "அதுசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே உங்கள் தோழியைக் காணம்..." கேட்டான் சூர்யா.

"எந்தத் தோழியைக் கேட்கிறீர்கள்..." என்று கண்சிமிட்டினார்கள்.

"இல்லை பட்டிமன்றத் தலைப்பைக் கொடுக்கலாம் என்றுதான்..." மறுபடியும் இழுத்தவன், "சரி இதை அவவிடம் மறக்காது கொடுத்து விடுங்கள்" சொல்லிய படி சைக்கிளை அவசரமாக மிதித்தான். இன்னும் நின்றாள் பிச்சு விடுவாளவை. சூர்யாவுக்கு அவர்கள் பேச்சு ஏனோ தெரியவில்லை மனத்திற்கு பிடித்தமாகத்தான் இருந்தது.

நண்பிகள் தந்து விட்டுச் சென்ற பட்டி மன்றத் தலைப்பை மறுபடியும் பார்த்தாள் ராஜி. 'விஞ்ஞானமா மெஞ்ஞானமா சிறந்தது' நல்ல தலைப்பு, இந்த நாளிற்குத் தேவையான தலைப்புத்தான். இவள் வாதிட வேண்டிய தலைப்பு 'மெஞ்ஞானம் சிறந்தது'.

வேறு பாடசாலை மாணவரும் இதில் பங்கேற்கின்றனர். சூர்யா என் பக்கமாக இருக்குமா அல்லது எதிரா... எதுவானல் என்ன. என் திறமையை சூர்யாவிற்குக் காட்ட நல்லதொரு சந்தர்ப்பம். அதோடு திறமையாக வாதிட்டு எல்லார் பாராட்டையும் பெற வேண்டும். உடனே புத்தக அலுமாரியில் உள்ள புத்தகங்களை புரட்டத் தொடங்கினாள்.

*அடுத்த இதழில் தொடரும்....*

## நீதி, நேர்மை, நிஜாயம்



*~ திருமலை செல்வன் ~*

"தம்பி எப்படி......"

"இருக்கிறம்...., சொல்லுங்கோ...."

"நீதி இருக்கா...."

"....இல்லையண்ண"

"நேர்மை இருக்கா"

".........இல்லையண்ண"

"நிஜாயம் இருக்கா"

"...............இல்லையண்ண"

"தம்பி நான் உன்னட்ட..... இதுகலெல்லாம் இங்க இருக்கிற எங்கட சனத்திட்ட இருக்கோ எண்டு கேக்க இல்லை.... இந்த படங்கள் இருக்கோ எண்டு தான் கேட்டனான்........"

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

PRINCESS PLAZA வில்
துவாரகாஸ்

1670 Victoria Park Ave.,
Toronto, Ont.
Tel: (416) 757-1091



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவித்தோட்டம்

## இச்... இச்....

கண்ணே...
எனக்கு
சோக ஜலதோஷம்
பிடித்து விட்டது...
உன்
கண்களுக்குள் - நான்
இருப்பதால் - நீ
கண்ணீர்விடும்
போதெல்லாம் - நான்
நனைந்து கொண்டிருக்கிறேன்
அதனால் எனக்கு
இச்... இச்....

~ கரன் ~

## கண்ணாடி

யாரவன்
கண்ணாடியை
கண்டு பிடித்தவன்
அவன்
ஒருவேளை
அழகனாக
இருந்திருக்கலாம்...
ஆனால்
என்னை மட்டும்
இப்படி
புலம்ப வைத்து
விட்டானே
பாவி...

~ சுரேஸ் ~

## சூரிய அழகன்

ஏய்
சூரிய அழகியே
உனது இதயத்தை
என்னிடம் தா....
அதை நான்
கழுவினால்
எனக்கும் சில
சூரிய அழகர்கள்
கிடைப்பார்கள்...



~ ரதி ~

## மைதானம்

அடி
பெண்ணே
எனது
மனதை - நீ
மைதானம்
என நினைத்தாயோ?
என்
இதயத்தை
கால்
பந்தாடுகின்றாய்.

~ வரன் ~

## பொய்

அன்பு...
பாசம்....
காதல்......

~ பவன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா வின்


# சொற் சிலம்பம்

போட்டி

இல:- 1

தயாரிப்பு:

எஸ். ஜெகதீசன்



## இடமிருந்து வலம்.

1. குத்தும்.... இணைக்கும்
4. வானமீதில் நீந்துவது. ஆனால் இதன் பெயரைக் குறிப்பிட்டால் இப்பொழுது உடனடியாக ஞாபகத்திற்கு வருவது பிரபலமான கவிஞர் ஒருவர் தான்.
6. டார்லிங்... டார்லிங்... டார்லிங் என்ற பாட்டு வரும், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த சினிமாப்பாட்டு.
8. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தவரை இந்த மரத்தின் கொட்டைகள் என்றனர் சிங்களவர்.
9. புத்தி
13. கைக்கூலி இல்லாமலே தின்னக் கூடியது.
16. உறுதியின் உறைவிடம்!
17. பாக்கிஸ்தானின் அயல் நாடு!
20. உலகெங்கும் பல பெண்கள் இப்படியாக உளர்!
21. சிறுவர்கள் விளையாடுவது. வீரர்கள் விளையாட்டுக் காட்டுவது.
23. பக்தரை பரவசப் படுத்தும் பகவான்.

## மேலிருந்து கீழ்.

1. கடந்த நாற்பது வருடங்களாக தமிழ் இலக்கிய உலகில் புகழ் பூத்த பெண் எழுத்தாளரின் புனை பெயர்.
2. போலி ஆங்கிலத்தில்...
3. சிரிக்க... சிரிக்க... வருவது.
5. முதல் இழந்தாலும் நட்டமில்லாதது.
7. உங்களுக்கு விடை தெரியும் எனின் இங்கு தெரி_ _ என்றே குறிப்பிடுவீர்கள்.
10. திருமதியின் புருஷன்.
14. மத்திய கிழக்கு நாட்டில் உள்ள தற்கொலை இயக்கும்.
16. கனடாவில் தபால் விநியோகம் இல்லாத ஒரு நாள்.
18. இஸ்லாமியர்க்கு மர்க்கா. கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலம். அதேபோல் இந்துக்களுக்கு உகந்த புனித யாத்திரைக்கான இடம் இது.
20. கால் அகன்ற மாது.

## வலமிருந்து இடம்.

11. பின்னுக்குப் 'பு' இல்லாதது இந்தத்துப்பு!
12. _ _ உண்டு. தம் வேலை உண்டு என்றிருப்போர் பலர்.

(40ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 3

குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அதிஷ்டசாலிகள்:-

1. **நிறஞ்சனி காசிநாதன்** (ஸ்காபுரோ)
2. **சேரன் கருணாகரன்** (டொன்மில்ஸ்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சு | 2 ப | 3 ம | 4 ங் | 5 க | 6 ளா |
| 7 ரே | 8 சி | 9 ல | 10 ந் | 11 தி | ■ |
| 13 ஷ் | ■ | 15 ர் | ■ | 17 ர | 18 தி |
| 19 மே | 20 டை | ■ | 22 ல் | 23 வ | 24 ங் |
| 25 ன | ■ | ■ | 28 ம | 29 ன் | 30 க |
| 31 ன் | 32 ண | 33 ண் | 34 க | ■ | 36 ள் |

**உங்கள் பதில்கள் யாவும் பெப். 10, 1995ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, முதலாம் பக்கத்தில் உள்ள 'ரோஜா' வின் முகவரிக்கோ அல்லது Fax க்கோ 25ஆம் பக்கத்திலுள்ள 'ரோஜா கூப்பனுடன்' அனுப்பி வையுங்கள்.**

**ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் இருவருக்கான பரிசில்களை 'TU La Publications' ஸ்தாபனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.**

***'ரோஜா'வின் சொற் சிலம்பம் :~ 1***

(39ம் பக்கத் தொடர்ச்சி)

### கீழிருந்து மேல்.

15. பழைய கிராம சேவகர்.
19. மருத்துவ மாது.
22. முன் வினைப்பயன்.
24. யானை... குதிரை... தேர் முதலிய வற்றைச் செலுத்துபவன்.


## வானொலி நிகழ்ச்சிகள்

| சங்கமம் | கீதவாணி | தமிழ்ச் சோலை | நற்செய்தி |
|---|---|---|---|
| AM 1320 KHz | CIRV 88.9FM | AM 1320 KHz | AM 1540 KHz |
| புதன் மாலை 9.00-10.00 | சனி காலை 10.00-11.00 ஞாயிறு காலை 6.00-8.00 | ஞாயிறு காலை 9.00-10.00 | செவ்வாய் மாலை 10.00-10.45 |

**RADIO ASIA - 530 AM** அலைவரிசையில்...

**திங்கள் முதல் - வெள்ளி வரை**
**மாலை 8.30 - 10.00**
**சனி, ஞாயிறு :~ மாலை 9.00 - 10.00**
'ராகப்பிரவாகம்', 'சங்கராபரணம்', 'தேமதுரம்', 'குங்குமம்'

'தமிழரங்கம்' :~ AM 1540 KHz - செவ்வாய் மாலை 10.45 - 11.30




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கலை நிகழ்ச்சிகள்


★ திருமண வைபவங்கள்

★ பூப்புனித நீராட்டு விழாக்கள்


★ பிறந்த நாள் கொண்டாட்டங்கள்



மற்றும் அனைத்து நிகழ்ச்சிகளையும்
வீடியோவில் சிறந்த முறையில்
பதிவு செய்திட.....







*Professional Video Photographic*
*Computer Editing*

# BLUE SKY FILMS

**Tel: (905) 624-7291** *(Jeya)*
**(416) 752-7171** *(Jesu or Rames)*
**Pager: (416) 330-0781**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI & BROTHER'S

நங்கையர் மனங் கவரும்
நவ நாகரீக ஆடைகளுக்கும்

வாலிப உள்ளங்களைக்
கொள்ளைகொள்ளும் ஜீன்ஸ்
சேட் வகைகளுக்கும்

RAJA, PYRAMID, RAMY
போன்ற CD வகைகளுக்கும்

இலங்கை, இந்திய, ஐரோப்பிய
நாடுகளுக்கு துரித பணமாற்றுச்
சேவைகளுக்கும்

சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட
22 கரட் தங்க நகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஸ்ரீ அன் பிறதர்ஸ்



வீடியோ பிரதி மாற்றம் செய்து கொடுக்கப்படும் PAL<> NTSC

இத்துடன் எமது ஸ்தாபனத்துக்குள்ளேயே இயங்கிக் கொண்டிருக்கிறது

## "POWER OPTICAL"

உங்கள் மூக்குக் கண்ணாடி தேவைகளையும்
பூர்த்தி செய்கிறார்கள்


ஸ்ரீ அன் பிறதர்ஸ்


1801 Lawrence Ave., Unit #5 (Lawrence/Pharmacy)
Scarborough, Ont.

**Tel/Fax: (416) 752-9960**

HG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org